1973 ஆகஸ்ட் 13]

பேட்டை, (11) இந்திரா நகர், (12) சிந்தாதிரிப்பேட்டை, (13) கோமளீஸ்வரன்பேட்டை, (14) அண்ணா நகர், (15) சூளை—ஈ.டி. மில்ஸ் காம்பவுண்டு, (16) திருவல்லிக்கேணி—சின். என். கே. ரோடு, (17) தியாகராயநகர்.

திரு. ஏ. எம். இராஜா : பம்பாய் நகரத்தில் அங்கே இருக்கிற வியாபாரிகளை ஒன்றுகூட்டி, மக்கள் நலம் கருதி எண்ணெய் விலையை 7½ ரூபாய்க்குமேல் உயர்த்துவது இல்லை என்கிற முடிவுக்கு வரும்படி செய்திருப்பதாகத் தெரிகிறதே, அதுபோல நமது மாநிலத்திலும் வியாபாரிகளைக் கூட்டி வைத்து எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பம்பாய் நகரத்தில் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை பம்பாய் மாநில முதலமைச்சர் எடுத்துக்கொண்டதான செய்தி வந்தது. மறுநாளே இந்து செய்திப் பத்திரிகையில் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்பதாகவும் செய்தி வந்தது. எது சரி என்பதை ஆராய்ந்து பார்த்து, இங்கும் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடலாம்.

திருத்தங்கல் கூட்டுறவு விவசாயப்பண்ணை

***119 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருத்தங்கல் கிராமத்தில் 1958-ல் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் கூட்டுப்பண்ணை கலைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதில் ஏற்பட்ட நஷ்டத் தொகைக்காக எடுக்கப்பட்டுவரும் ஜப்தி நடவடிக்கைகளால் அப்பகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) & (உ) ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அதனால் யாரும் பாதிக்கப்படவில்லை.

[1973 ஆகஸ்ட் 13

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, சிலர் தவறு இழைத்த காரணத்தினால் விவசாயிகள் இதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்காவது விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்கள் சொல்வது தவறு. மொத்தமாக 59 உறுப்பினர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். 43 பேர்களைத்தான் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத் தொகை 73 ஆயிரத்தில் 6 பேர்கள் மட்டும் 48 ஆயிரம் ரூபாய் கிணறுகள் வெட்டுவதற்காக வாங்கியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து செண்ட் 5 ரூபாய் என்று அவர்கள் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். 43 பேர்களில் 13 பேர்கள் வந்து அப்படித் தருவதாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பாக்கியுள்ள 30 பேர்கள் பற்றித்தான் பிரச்சினை. அதுபற்றியும் பரிசீலனை செய்து டி.ஆர். அளிக்கிற தீர்ப்புப்படி நடக்க வகைசெய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கூட்டுப் பண்ணையை அரசாங்கம் விவசாயிகளை ஒன்று திரட்டி அதிகமாக உதவி செய்ய வேண்டுமென்று ஆரம்பித்தது. நான்கைந்து கிணறுகள் வெட்டப்பட்டன. பம்பு செட்டுகள் போடப்படாத காரணத்தினால் கிணறுகள் வெட்டியும் பயனில்லாது போய்விட்டது. இப்போது அந்தப் பணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்தால் நிலங்களே போய்விடக்கூடிய நிலை இருப்பதால் அந்தப் பணத்தை வஜா செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முன்பே சொன்னேன். இதில் 43 பேர்கள் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆறு பேர் பயன் அடைந்திருக்கிறார்கள். கணக்குத் தொகை கிட்டத்தட்ட 26 ஆயிரம் ரூபாய்—அதைப் பிரித்து செண்டுக்கு 5 ரூபாய் வீதம்—நிலத்தைச் சீர்திருத்தம் பண்ணின செலவும் இதில் சேர்ந்ததுதான்—செலுத்த வேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். பதின்மூன்று பேர்கள் சம்மதித்துவிட்டார்கள். பாக்கியுள்ள 30 பேர்கள் தான் சம்மதிக்கவில்லை. அதற்கும் அவர்களுடைய குறைகள் என்ன என்பதை விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களுக்கு உண்மையில் என்ன

1973 ஆகஸ்ட் 13]

கஷ்டம் இருக்கிறதோ அதை அறிந்து நீக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கலாம். எனினும் இப்போது ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் சென்ட் 5 ரூபாய் என்றால் ஒரு ஏக்கரா 500-க்கு வருகிறது. சென்ட் 3 ரூபாய் தான் நிலத்தின் மதிப்பே இருக்கும். நிலத்தை விற்றுக் கொடுக்கக்கூடிய நிலைதான் வரும். ஆகவே இதைப் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விவசாயிகளுடைய குறைகளை, கஷ்டங்களை அறிந்து எந்தமுறையில் தீர்க்க முடியுமோ அந்த முறையில் தீர்க்கப்படும்.

Houses for weavers

*120. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Housing Board has proposals to build cheap houses for the weavers; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) மனையின் விலை நீங்கலாக ரூ. 7,500 செலவில் குடியிருப்புக்காக 285 சதுர அடி பரப்பும், நெசவு வேலைக்காக 200 சதுர அடி பரப்பும், ஒரு அறையும் கொண்ட catenary shell type வீடுகள் நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டின் விலையில் ரூ. 1,000 முன் பணமாகவும் மீதமுள்ள ரூ. 6,500-ஐ மாதத் தவணை முறையில் ரூ. 90 ஆகவும் நெசவாளர்கள் செலுத்த வேண்டியதிருக்கும். இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது. அதற்காக விபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, in view of the vastness of the problem and also the fact that a large number of houses are required for the weavers and other poor class people, will this Government consider the question of stopping construction of